**வாக்குமூலம்**

**குற்றவியல் நடுவர் நீதிமன்றம் , தென்காசி .**

**வழக்கு எண் : CC.No.204/2019**

**வழக்கு சாட்சி PW-2**

| பெயர் | மாயதுரை | தாலுகா | ஆலங்குளம் |
|---|---|---|---|
| தந்தை பெயர் | முருகையா | தொழில் | விவசாயம் |
| கிராமம் | நாகல்குளம் | வயது | 39 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 23.06.2026

(எதிரிகள் ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:-

நான் தற்போது நாகல்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது ஆட்டோ ஓட்டுகிறேன். இதற்கு முன்பு விவசாயம் மற்றும் கூலி வேலை பார்த்தேன். 1 முதல் 9 எதிரிகளை எனக்கு தெரியும். நான் வேலை பார்க்கும் தோட்டத்திற்கு பக்கத்து தோட்டக்காரர் 1வது எதிரி, மற்ற எதிரிகள் அங்கு வருவார்கள். அசா.1 வெங்கடேஷ் என்பவரை தெரியும். சாட்சிகள் விநாயகம், பிச்சம்மாள் ஆகியோர்களை தெரியும். கடந்த 07.05.2018ம் தேதி மாலை 04.00 மணியளவில் மேலபட்டமுடையார்புரத்தில் உள்ள அசா.1 வெங்கேடஷ் என்பவரது தோட்டத்தில் எதிரிகள் அத்து மீறி உள்ளே வந்தார்கள். நான் பக்கத்தில் வேலை பார்த்து கொண்டிருந்தேன். அசா.1 மாடை அவிழ்த்து கட்டி கொண்டிருந்தார். அப்போது எதிரிகள் அசா.1 யை பார்த்து தேவுடியா மவனே, செறிக்கி மவனே என அசிங்கமாக பேசினார்கள்.

எதிரிகள் கையில் கம்பை வைத்துக்கொண்டு அசா.1 ஐ கம்பால் அடித்தார்கள். உடல் முழுவதும் அசா.1க்கு காயம் ஏற்பட்டிருந்தது. பின்னர் அசா.1 மயக்கமாக இருந்தார். நான் உடனே அசா.1ன் அப்பா மாடசாமிக்கு தகவல் சொல்லி விட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் ஆலங்குளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். பின்பு அங்கிருந்து திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். மறு நாள் அசா.1 மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது போலிசார் அங்கு வந்து அசா.1 ஐ விசாரித்து எழுதி கொண்டார்கள். அதில் நான் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்து கொடுத்தேன். போலிசார்

என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் , தென்காசி .

வழக்கு எண் : CC.No.204/2019

வழக்கு சாட்சி PW–1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கடேஷ் | தாலுகா | ஆலங்குளம் |
| தந்தை பெயர் | மாடசாமி | தொழில் | விவசாயம் |
| கிராமம் | நாகல்குளம் | வயது | 27 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 23.06.2026

(எதிரிகள் ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது நாகல்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். 1 முதல் 9 எதிரிகளை எனக்கு தெரியும். என்னுடைய தோப்பு இருக்கும் ஊர்க்காரர்கள். சாட்சிகள் மாயதுரை, விநாயகம், பிச்சம்மாள் ஆகியோர்களை தெரியும். கடந்த 05.07.2018ம் தேதி மாலை 04.15 மணியளவில் மேலபட்டமுடையார்புரத்தில் உள்ள என்னுடைய தோப்பில் நான் மாட்டை கட்டி கொண்டிருந்தேன். அப்போது எதிரிகள் அத்து மீறி தோப்பிற்கு வந்து எதிரிகள் அனைவரும் கையில் கம்பு வைத்திருந்தார்கள். அங்கு வந்து என்னை பார்த்து தேவுடியா மவனே, கூதி மவன் என கெட்ட வார்த்தையால் பேசி கம்பை கொண்டு என்னை தாக்கினார்கள். என்னுடைய இடது காது, தலை, இடது கை, வலது கால் முட்டு மற்றும் உடல் முழுவதும் காயம் ஏற்பட்டது. எதிரிகள் அனைவரும் இந்த தடவை உன்னை விட்டு விட்டோம். அடுத்த முறை உன்னையும், உன் அப்பாவையும் வெட்டாமல் விடமாட்டோம். எங்கள் கையால் தான் சாவு என மிரட்டினார்கள்.நான் அங்கு அடிக்கடி செல்வதால் எனக்கு பயமாக இருக்கிறது. பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் ஆலங்குளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு முதலுதவி சிகிச்சை எடுத்து கொண்டு திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

நான் சிகிச்சையில் இருந்த போது மறுநாள் காலை போலிசார் வந்து என்னை விசாரித்து எழுதி கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும்

புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான் மேற்படி புகார் வாக்குமூலம் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi